**<u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>**

| H.M.O.P. No.103/2021 | Date : 17.10.2024 | PW2 |
|---|---|---|
| Name: பழனிசாமி | த/பெ.சின்னுசாமி | |

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

நான் மேட்டுரில் தொட்டில்பட்டி என்ற ஊரில் குடியிருந்து வருகிறேன். நான் சைஸ் கல் உடைக்கும் தொழில் செய்து வருகிறேன். இம்மனுவின் மனுதாரர் கந்தசாமி எனது மகன் ஆவார். எதிர்மனுதாரர் சவீதா எனது மருமகள் ஆவார். மனுதாரரும், எதிர்மனுதாரரும் விருப்பப்பட்டு காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் காதலித்து திருமணம் செய்து கொண்ட விவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். மனுதாரரும், எதிர்மனுதாரரும் 2016ம் வருடம் கர்நாடகா மாநிலம் மாலூரில் திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். திருமணமான சமயத்தில் எனது மகன் கணினி பொறியாளராக வேலை பார்த்துக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு மனுதாரரும் எதிர்மனுதாரரும் ஒன்றாக கர்நாடகா மாநிலம் கோலார் என்ற ஊரில் வசித்து வந்தார்கள். மனுதாரரும் எதிர்மனுதாரரும் ஒன்றாக மூன்று வருடங்கள் மேற்படி ஊரில் வசித்து வந்தார்கள் என்றால் சுமார் 2 வருடங்கள் வசித்து வந்தார்கள். மனுதாரரும் எதிர்மனுதாரரும் மேற்படி ஊரில் மூனறு வருடங்கள் ஒன்றாக வசித்து வந்ததாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. மனுதாரரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தார் என்றால் சரிதான். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு மகன் பிறந்த போது எங்கள் குடும்பத்தார் யாரும் சென்று பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். நான் சொல்வது தவறு என்றும் நான் மருத்துவமனைக்கு சென்று பார்க்கவில்லை என்றும் மருத்துவ செலவு எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மருத்துவ செலவு நானும் செய்தேன். நான் சொல்வது தவறு என்றும் மருத்துவ செலவை எதிர்மனுதாரரின் பெற்றோர்தான் செய்தார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தனது அம்மா குடும்பத்திற்கு சேர்த்து மனுதாரரே அனைத்து செலவுகளையும் செய்யவேண்டும் என்று நிர்பந்திக்கிறார் என்று நான் எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றும் மேற்படி விவரம் பற்றி எனக்கு யார் சொன்னார்கள் என்றால் எனது மகன் சொன்னார். மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணமான பிறகு 2019ம் வருடம் வரை நான் அவர்களை பார்க்கவில்லை என்றும், நான் வழக்கிற்காக மேற்படி விவரங்களை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எனது மகனிடம் கேட்ட போது பணம்

கொடுக்கவில்லை என்றால் சண்டை போடுவார் என்று நான் கூறியுள்ள விவரம் பொய்யானது என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு 2019ம் வருடம் வரை நான் எத்தனை முறை மனுதாரரையும், எதிர்மனுதாரரையும் சென்று பார்த்தேன் என்றால் நிறைய முறை சென்று பார்த்துள்ளேன். திருமணத்திற்கு பிறகு 2019ம் வருடம் வரை நான் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரை சென்று பார்க்கவில்லை என்றும் திருமண செலவு முதல் குழந்தையை பெற்றெடுக்கும் மருத்துவ செலவு வரை எதிர்மனுதாரரின் பெற்றோர்தான் செய்தார்கள் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு எனது மகன் ரூ.50,000/– செலவு செய்துள்ளார். திருமணத்திற்கு பிறகு நானோ, எனது குடும்பத்தினரோ எனது உறவினரோ மனுதாரரையும் எதிர்மனுதாரரையும் சென்று பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் காதலித்து திருமணம் செய்து கொண்டதால் எனது மகனையும் மருமகளையும் நான் எப்போதும் சென்று பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இரண்டு மகள்கள் உள்ளார்கள். ஒரு மகன் உள்ளார். எனக்கும் எனது மனைவிக்கும் மருத்துவ செலவு கூட எனது மகன் செய்யக்கூடாது என்று எதிர்மனுதாரர் நிர்பந்தித்து வந்தார் என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனது மகனுக்கு எந்த சுகமும் எதிர்மனுதாரர் கொடுக்கவில்லை என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றும் மேற்படி விவரத்தை எனக்கு யார் சொன்னார்கள் என்றால் என் மகன் சொன்னார். நான் சொல்வது போல் எந்த நிகழ்வும் நடக்கவில்லை என்றும், மேற்படி விவரங்களை கற்பனையாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 2019ம் வருடத்திற்கு பிறகு கொரோனா கால கட்டத்தில் எனது மகன் மட்டும் கோலாரில் இருந்து எங்கள் ஊருக்கு திரும்பி விட்டார் என்றால் சரியல்ல. அனைவரும் தான் வந்தோம். நான் சொல்வது தவறு என்றும் கொரோனா காலத்தில் எதிர்மனுதாரரையும் அவரது குழந்தையையும் கோலாரில் விட்டுவிட்டு எனது மகன் மட்டும் ஊர் திரும்பி விட்டார் என்றால் சரியல்ல. எனது மகன் எதிர்மனுதாரரையும், அவரது குழந்தையையும் கோலாரில் விட்டுவிட்டு வந்ததால் கோலார் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழவேண்டும் என்று கோரி மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி மனுவின் மீது மனுதாரரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ வேண்டுமென்று கோலார் நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற உத்தரவை தெரிந்து கொண்ட பிறகு எனது மகன் எதிர்மனுதாரரையும் குழந்தையையும் உடன் அழைத்து வராமல் அங்கேயே விட்டுவிட்டு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது மகன் அழைத்தார் எதிர்மனுதாரர்தான் சேர்ந்து வாழ வரவில்லை. நான் சொல்வது தவறு என்றும், எதிர்மனுதாரர் தற்போதும் மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் எதிர்மனுதாரர் வந்தால் அழைத்து செல்ல தயாராக உள்ளோம். மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக இருந்தால் இந்த மனுவை தள்ளுபடி செய்ய

ஆட்சேபணை உள்ளதா என்றால் ஆட்சேபணை உள்ளது. எதிர்மனுதாரர் மனுதாரர் மீது ஜீவனாம்சம் கோரி மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனுவில் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக உத்தரவிடப்பட்டு மனுதாரர் இதுநாள் வரை ஜீவனாம்ச தொகை எதுவும் எதிர்மனுதாரருக்கு கொடுக்கவில்லை என்றால் எனது பேரனுக்கு கொடுத்து வருகிறார். நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவருடன் மனுதாரர் சேர்ந்து வாழவேண்டும் என்று தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் அதனால் மனுதாரருக்கு எந்த மன உளைச்சலும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரும் மனுதாரரும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் எதிர்மனுதாரர் எந்த சமூகத்தை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் எனது மனைவியும் எனது மகள்களும் எனது மகனுடன் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ கூடாது என்று எதிர்மனுதாரர் மேட்டுருக்கு வருவதை தடுத்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் இப்போதும் மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் அவர் நீதிமன்றத்தில் ஒரு பேச்சும் வெளியில் ஒரு பேச்சும் பேசுவார். எதிர்மனுதாரர் மனுதாரருடன் எந்த ஊரில் வேண்டுமானாலும் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. உண்மை நிலையை மறைத்து மனுதாரர் என் மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் எனது மகனுக்கு விவாகரத்து பெற்று வேறு பெண்ணை திருமணம் செய்யும் நோக்கத்தோடு எனது மகன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் எதிர்மனுதாரர் எங்கள் வீட்டிற்கு வந்து பிழைக்கட்டும் இல்லை என்றால் வேறு என்ன செய்ய முடியும். பொய்யான மனு என்பதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—பழனிசாமி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டுர்.